# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஹிஸ்புல்லாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்)

**ஹிஸ்புல்லாஹ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கே. காதர் மஸ்தான்
அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

---

[ *34 ஆம் சட்டமூலம்* ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## ஹிஸ்புல்லாஹ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

''ஹிஸ்புல்லாஹ் மன்றம்'' என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றம் சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்குமுன்னர் டெலிகொம் வீதி, காத்தான்குடி, மட்டக்களப்பு மாவட்டத்தில் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஹிஸ்புல்லாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஹிஸ்புல்லாஹ் மன்றம் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் தற்போது குறித்த ஹிஸ்புல்லாஹ் மன்றம் (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' என குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் ''ஹிஸ்புல்லாஹ் மன்றம்'' என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட (இதனகத்துப்பின்னர்) ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும்.

அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலா மென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) நாட்டின் சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல் ;

(ஆ) சமய சார்பான நிலையங்களின் அபிவிருத்தியில் உதவி வழங்கல் ;

(இ) பெண்கள் மற்றும் சிறுவர்களின் சகல உரிமைகளைப் பாதுகாத்தலும் அவைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தலும் ;

(ஈ) திடீர் அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுதலும் மற்றும் அவர்கள் தம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அவர்களுக்கு உதவுதலும் மற்றும் தேவையான சட்ட ஆலோசனைகள் வழங்கலும் ;

(உ) இலங்கைவாழ் இனங்களுக்கிடையில் சமாதானம், தூய எண்ணம், பரஸ்பர உறவு மற்றும் ஒத்தாசை போன்றவற்றை வளர்த்தல் ;

(ஊ) வறிய சிறார்களுக்கு அவர்களின் கல்வியை தங்கு தடையின்றி கற்பதற்குத் தேவையானவகையில் பாடசாலைக்குப் பௌதீக வளங்களை வழங்கி உதவி செய்தல் ;

(எ) பாடசாலையை விட்டு விலகும் பிள்ளைகளின் கலை, விளையாட்டு, தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும்

நோக்கில் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களை உருவாக்குதலும் தொழில்நுட்ப கணினி கற்கை நிலையங்களை அமைப்பதும் நவீன தொழில் நுட்பங்கள், கணனி விஞ்ஞானம் போன்றவற்றிற்கு உதவிகளை வழங்கலும் ;

(ஏ) இனம், மதம் அல்லது சாதி பற்றிய ஏதேனும் குறிப்பீடுகள் இன்றி கல்வி, மத, கலாசார, கலைசார் மற்றும் விளையாட்டு வசதிகளின் அபிவிருத்தியில் உதவுதல் அத்துடன் பலதரப்பட்ட விழாக்கள் மற்றும் போட்டிகளை நடாத்துதல் ;

(ஐ) வறிய கைவிடப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட ஆட்களுக்கான மருத்துவ நிவாரணங்கள் மற்றும் உணவுகளை வழங்குதல், இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் முதியோர்களுக்கான வீடுகளைத் தாபித்தலும், பராமரித்தலும் சிறுவர் இல்லங்களை அமைத்தலும் அத்துடன் சிறுவர்கள் மற்றும் முதியோர்களுக்கான நாள் கவனிப்பு நிலையங்களை தாபித்தலும் பராமரித்தலும் ;

(ஒ) ஒத்த குறிக்கோள்களைக்கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தலும், ஒத்துழைத்தலும்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் பதினொரு பேரைக்கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபை ஒன்றின்மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

(2) மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினரான கௌரவ அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பணிப்பாளர்கள் சபையின் ஆயுட்காலத் தவிசாளராதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் தவிசாளராகப் பதவியை வகிக்கின்ற ஆளின் நெருங்கிய உறவினர் பணிப்பாளர்கள் சபையின் அடுத்த தவிசாளராக வருதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) தவிசாளர் தவிர்ந்த பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினரொருவர், இறப்பினால், பதவி விலகலால், முன்னதாகவே தமது பதவி வெற்றிடமானாலொழிய, நான்கு ஆண்டுகாலப் பகுதிக்குப் பதவி விலகலின் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, புதிய உறுப்பினர் ஒருவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்ப நியமிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புதிய உறுப்பினர் நான்கு ஆண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.**

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக்கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப் பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடுசெய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

**கூட்டுத்தாபனத்தின் விதிகள்.**

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மை வகைப்படுத்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும் அல்லது விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவிநீங்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களது தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும்;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழுவின் அல்லது ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களின் நேரம், இடங்கள், கூட்டம் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும் அவற்றின் கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை கொண்டுநடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்களும் நடத்தைகளும் கடமைகளும் பணிகளும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்வதற்கும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்றைப்போன்று அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அத்துடன் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க் கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லா கடன்களும் அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் மன்றத்திற்கு செலுத் தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8**. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக இதுகாலவரை அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங் களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாமென்பது.

**9**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஏதும் உடன்படிக்கையின் கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத் தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வருமதியாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கூட்டுத்தாபனம் கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது ; ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**12.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதனால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றியும் முறையான கணக்குகள் வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகக்குறைந்தது ஒருதடவையாவது பரீட்சிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் வருமானம் மற்றும் செலவினக் கணக்குகள் மற்றும் ஐந்தொகையின் சரியாந்தன்மை முகாமைக்குழுவினால் நியமிக்கப்படும் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது-

(அ) இலங்கையின் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பின

ரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் அலுவலரொருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தம் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் *15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்